கண் திறக்கப்பட்டவன்

அப்போஸ்தலர் S. ஏசுதாசன்

Transcribed by GTG, NJC Bengaluru

கண் திறக்கப்பட்டவன்

செய்தி:

அப்போஸ்தலர் S- ஏசுதாசன்

புதிய எருசலேம் சபை

நாகர்கோவில்

Ph- 8903131260, 9489529462

www.newjerusalemnews.in

Special sermon as telecasted on Nambikkai TV
on 8 Apr 2021

Video sermon transcribed by
“Glory To God (GTG)”
NJC Bengaluru

இந்த வீடியோ செய்தியை njcngl Youtube channel - ல் காணலாம்.

ப்ரெய்ஸ் த லார்ட், கர்த்தருடைய பரிசுத்தமுள்ள நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. மறுபடியும் இந்த நாளிலும் டி.வி. நிகழ்ச்சி மூலமாக உங்களை சந்திக்கும் படியான சிலாக்கியத்தை ஆண்டவர் கொடுத்தபடியினாலே, ஆண்டவருடைய நாமத்தை ஸ்தோத்தரிக்கிறேன். தேவனுக்கு மகிமை. தேவனுடைய திரு வசனத்தை தியானிக்கும் முன்னால் ஜெபம் பண்ணுவோம்.

அன்பின் ஆண்டவரே ஆ...தேவனே துதிக்கிறேன்... ஐயா... நீர் சொன்ன வார்த்தைகளை சொல்லும்படியாக உம் பாதத்தில் வந்திருக்கிறோம். கர்த்தர் எங்களோடு இருந்து பேசவேண்டும் என்று கெஞ்சுகிறோம். மக்கள் மனதிலே ஆழமாய் பதிய வேண்டும் என்று கெஞ்சுகிறோம். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், தேவனே ஸ்துதிக்கிறோம். தேவனுடைய பிள்ளைகள் மத்தியில் இவைகள் ஆழமாய் பதிந்து பலன் கொடுக்க வேண்டுமென்று கெஞ்சுகிறோம். ஆ....கர்த்தாவே ஸ்தோத்திரம் ! ஸ்தோத்திரம்! ஆண்டவரே. கிரியை நடப்பிக்க வேண்டும் என்று கெஞ்சுகிறோம்.

திருவசனத்தை கேட்டு அதை அப்படியே விட்டுவிடாதபடி அதை அவர்கள் கைக்கொள்ள கர்த்தர் நல்ல கிருபை தந்தருள வேண்டும் என்று ஜெபம் பண்ணுகின்றோம் .உம்முடைய வார்த்தை வல்லமையுள்ளது .உம்முடைய வார்த்தை ஆவியாகவும் ஜீவனாகவும் இருக்கின்றது. அது கன்மலையை உடைக்கக்கூடிய சக்திவாய்ந்ததாக இருக்கிறது என்று அறிந்திருக்கிறோம் சுவாமி. கர்த்தர் கிரியை செய்யும். உம் உன்னத நாமத்தை மகிமை படுத்துகிறோம். இயேசுவின் மூலம் ஜெபிக்கிறோம் பிதாவே, ஆமென்.

அன்பான கர்த்தருடைய பிள்ளைகளே. இந்த நாளிலும் உங்கள் மத்தியில் வைக்கும் படியாக தேவன் கொடுத்த வார்த்தைகளை சொல்லுவதற்காக அடியேன் தேவ சமூகத்திலே காணப்படுகிறேன்.

தேவனுடைய வார்த்தையை தேவனுடைய வார்த்தையாக விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்போது அது அவர்களிலே பெலன் செய்கின்றதாக இருக்கிறது என்று இறைவசனம் சொல்லுகின்றபடியினால், கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன், அல்லேலூயா. தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே. இந்த பூமியிலே வாழ்கின்ற நமக்கு கண்கள் தேவை. கண் தான் சரீரத்தினுடைய விளக்காக இருக்கிறது என்று இறைவசனம் சொல்லுகிறது. மனிதன் இரண்டு வகையாக இருக்கின்றான் என்றும் வேதம் சொல்லுகின்றது. ஒன்று உள்ளான மனிதன், இன்னொன்று புறம்பான மனிதன். புறம்பான மனிதன் பாவமனிதனாக இருக்கின்றான். அந்த புறம்பான மனிதனுக்கு இருக்கின்ற கண்கள் எப்பொழுதுமே தீமையானவைகளையே பார்க்கிறது. தீமையானவைகளையே அது தேடுகின்றது. உலகத்துக்கு உரியவைகளைத்தான் அது கண்ணோக்குகின்றது என்று நாம் காணுகின்றோம்.

ஆனால், உள்ளான மனிதனுடைய பார்வையாகிய அந்த கண்களின் பார்வை தெய்வீக பார்வையாக இருக்கிறது. அது தேவனுக்குரியவைகளை சிந்திக்கிறதும், அவைகளை பார்க்கிறதும் தேடுகிறதுமாக இருக்கிறது என்று நாம் காணுகின்றோம். ஆதி மனிதனாகிய ஆதாமையும் ஏவாளையும் ஆண்டவர் தம்முடைய சாயலில் அவர்களை படைத்தார் என்று நாம் காணுகின்றோம். ஆதாம் தேவசாயலில் படைக்கப்பட்டான் ஏவாள் அவளும் ஆதாமின் சாயலிலே படைக்கப்பட்டிருக்கிறாள்.

எப்படியும் அவர்கள் தேவசாயலாக படைக்கப்பட்டார்கள் என்று நாம் காணுகின்றோம். தேவனுக்கு மகிமை உண்டாவதாக, அருமையானவர்களே அவர்களுக்கு பாவக் கண்கள் இல்லை. அவர்களுடைய கண்கள் தூய்மையானவைகளை, நல்லவைகளை பரிசுத்தமானவைகளை பார்க்கின்றதாக இருக்கின்றது என்று இறைவசனம் சொல்லுகின்றது. இங்கே நாம் வாசிக்கிறோம் (ஆதி 3:5-7) வரை உள்ள வசனங்களை வாசிக்கும்போது இவ்வண்ணமாக நாம் காணுகின்றோம்.

5 நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது (ஆதியாகமம் 3:5).

6 அப்பொழுது ஸ்திரீயானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத்தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான் (ஆதியாகமம் 3:6).

7 அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள் (ஆதியாகமம் 3:7).

சாத்தான் சொல்லுகின்றான், "நீங்கள் தோட்டத்தின் மத்தியில் இருக்கிற விருட்சத்தின் கனியை புசித்தீர்கள் என்றால் உங்களுடைய கண்கள் திறந்துவிடும்.நீங்கள் நன்மையையும் தீமையையும் அறியத்தக்கதான அறிவுடையவர்களாக மாறிவிடுவீர்கள். நன்மையை அறிந்த மனிதன் இப்போழுது இந்த கனியை சாப்பிட்ட உடன் என்ன ஆகி விடுமாம் தீமையை அறியக்கூடிய , தீமையை பார்க்கக் கூடிய அறிவு ஏற்பட்டுவிடும் என்று சாத்தான் சொன்னான். அப்படியே அவர்கள் செய்த படியினால் சொன்னபடி அப்படியே ஆயிற்று (ஆதி 3:5 - 7).

இப்போது நாம் இங்கு பார்க்கும் அவர்களின் கண்கள், அதாவது அவர்களுடைய பாவக் கண்கள் திறக்கப்பட்டுவிட்டது. ஆவிக்குரிய கண்கள் மங்கிப் போய்விட்டது. ஒரு மனிதன் தேவனுடைய வார்த்தையை , கட்டளையை அவன் மீறுகின்ற நேரத்திலே அவனில் முதல் சம்பவிக்கிற காரியம் இது தான்.அவனிலே பாவப் போராட்டம் , பாவ எண்ணங்கள் , உலக நேசங்கள், தீமையான ஆலோசனைகள் அவனிலே பிறப்பிக்கப்படுகிறதை நாம் காண்கிறோம்.

அதுவரைக்கும் நிர்வாணமாகத்தானே இருந்தார்கள் . கண்கள் தேவனுடைய கட்டளையை மீறிய உடனே பாவக் கண்கள் திறந்தவுடன் வெட்கமும் , கூச்சமும் ஏற்பட்டு இவர்கள் தங்கள் நிர்வாணத்தை மறைக்க தன்னுடைய அவலட்சணத்தை மறைக்க தங்கள் நிர்வாணத்தை மறைக்க அத்திமரத்தின் இலைகளை பறித்து அதை தைத்து அரைக்கச்சையாக

கட்டிக்கொண்டார்கள். இது அவர்களுக்கு பாதுகாப்பாக இருக்காது. இது அவர்களுக்கு பாவத்தை போக்க ,பாவத்தை மறைக்க , பாவ எண்ணங்களை நீக்க , அவர்களுக்கு உதவி செய்யாது என்பதை இந்த மக்கள் அறிந்திருக்கிறார்கள்.

மனிதன் தன்னில் தானே அப்படிப்பட்ட சூழ்நிலையை , வல்லமையை பெற்றுக் கொள்ளுகிறது இல்லை என்று இறை வசனம் சொல்கிறபடியினால் ஆண்டவரை துதிக்கிறேன். அத்தி இலையை பறித்து அதை அரைக்கச்சையாக கட்டிக்கொண்டார்கள். அத்தி இலை வெய்யில் அடித்தால் சுருங்கி பழையபடி நிர்வாணம் காட்டப்படும். மழை பெய்தால் அழுகிபோய் நாற்றமெடுக்க ஆரம்பித்து விடும். இது அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிறது இல்லை.

ஆகவே,மனிதன் தேவ வார்த்தையை, தேவனுடைய கட்டளையை தனக்கு தேவன் சொன்ன காரியத்தை எந்த மனிதன் மீறுகின்றானோ அவனில் பாவம் எழும்பி போராட ஆரம்பிக்கிறது. தன்னிலே அதுவரைக்கும் இருக்கிற சூழல்களை அறியாத அவனுக்குள் இப்போது தான் ஒரு பாவியென்ற அறிவும் அவனுக்குள் வர ஆரம்பித்துவிட்டது.

இதை அறிந்த பிதாவாகிய தேவன் அவனுக்கு என்ன செய்தார் என்றால், தன்னுடைய குமாரனை இந்த பூமிக்கு அனுப்பி, குமாரன் மூலமாக மனிதனுடைய நிர்வாணத்தை மறைக்க , பாவத்தை போக்க , அவர்களுக்கு நல்ல உள்ளான மனிதனுடைய ஆவிக்குரிய பார்வையை கொடுப்பதற்காக ஆண்டவர் சித்தம் கொண்டார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கல்வாரியிலே மரித்ததும், ஜீவனை கொடுத்ததும், இத்தனை பாடுகளை பட்டதும் எதற்காக என்றால்? மனிதன் மறுபடியும் ஆவிக்குரிய பார்வை உடையவனாக ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டவனாக அவன் ஆகவேண்டும் என்பது தான். இது தான் தேவனுடைய திருவுளசித்தம் என்று நாம் காணுகிறோம்.

ஆனபடியால்தான், அந்த ஆவிக்குரிய கண் திறக்காததினால் தான் இன்று மனிதர்கள் ஒருவரை ஒருவர் பகைக்க, அல்லது கிறிஸ்தவர்களை பகைக்க, கிறிஸ்துவ மார்க்கத்தை பகைக்க, இது என்னவென்றே தெரியாமல் அவர்கள்

எதிர்ப்பு தெரிவிக்க விரும்புகிறது அதனால் தான். நல்லவர்களை தாக்குகின்றார்கள். இவர்களுடைய ஆவிக்குரிய கண் குருடாகிவிட்டபடியால் இவர்களின் பாவ கண்கள் திறந்து விட்டபடியினால் , கண்கள் குருடாகி பாவக்கண்கள் திறக்கப்பட்டபடியால் இப்படி ஆகிவிடுகின்றனர்.

ஆனபடியால், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த பூமியில் வந்து மனிதனுடைய ஆன்மீக கண்ணை திறக்க, அவர்களுடைய நிர்வாணத்தை மறைக்க, அவனுக்கு வஸ்திரம் கொடுக்க, அவனுடைய ஆவிக்குரிய கண்களை திறக்க ஆண்டவர் சித்தம் கொண்டார்.

ஆண்டவர் கல்வாரியில் சொன்னார் அல்லவா?. பிதாவே இவர்களுக்கு மன்னியும் , தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாமல் செய்கின்றார்கள் என்று ஆண்டவர் சொன்னார் அல்லவா? அந்த வண்ணமாகத்தான் . மன்னிப்பதே அவருடைய சித்தம். கடவுள் என்றால் யார்? இயேசு? அடிக்கிறவர்களையும் , தன்னை துன்பப்படுத்துகிறவர்களையும் ,.மன்னித்து அவர்களுக்கு மறுபடியும் தெய்வீகத்தை அறிந்து கொள்ளும் கண்களை அவர்களுக்கு கொடுக்கும்படியாக அவர் விரும்புகிறார்.

யூதர்கள் அப்போஸ்தலனாகிய பவுலை பகைத்தார்கள், கொலை செய்யவும் முற்பட்டார்கள்.அவரை இல்லாமல் ஆக்கி விட வேண்டும், நம்முடைய மார்க்கத்துக்கு விரோதமாக, நம்முடைய மார்க்கத்தில் இருந்தவனே இப்பொழுது மாறி இப்போது. மார்க்கத்துக்கு விரோதமாக செயல்படுகிறபடியால் ,அவனை அழித்துவிட வேண்டும் என்று தீர்மானம் பண்ணி பெரிய சர்ச்சை உண்டாகி, அன்றிருந்த அகிரிப்பா ராஜாவிடம் இந்த வழக்கு வந்து சேர்ந்தது. வந்தபோது, அங்கு அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக நிற்கும் போது பவுல் தன்னுடைய சந்திப்பையும் தான் முன்பு இருந்த அனுபவத்தையும், இந்த ஜனங்கள் அதை பற்றி அறிந்திருந்தார்கள் என்பதையும். அவர்களைப் போலத்தான் நானும் இருந்தேன் இப்போது என்னுடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு இருக்கிறது அல்லவா. இப்போது கர்த்தராகிய இயேசுவை, கிறிஸ்துவை தெய்வமாய் அறிந்தேன். தெய்வமாகிய இயேசு என்னை பிடித்தார். அவர் என்னை சந்தித்தார். அவர்

என்னை பயங்கரமான ஒளியில் என்னை சந்தித்து எனக்கு சொன்னதாவது (அப்26:18-19). வாசிக்கலாம்.

18 அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார் (அப்போஸ்தலர் 26:18).

19 ஆகையால், அகிரிப்பா ராஜாவே நான் அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை (அப்போஸ்தலர் 26:19).

தேவனுக்கு மகிமை உண்டாவதாக அவர் விளக்கமாய் சொல்லுகிறார். நான் சிறுவயதிலே அவர்களை போல இந்த மார்க்கத்திலே பக்திவைராக்கியமுடையவனாக நான் இருந்தேன். இந்த தரிசனம் எனக்கு உண்டாயிற்று . அவர் மனிதனுக்கு பாவமன்னிப்பாகிய இரட்சிப்பு கிடைக்க வேண்டும் என்றால் இயேசு கிறிஸ்துவை தெய்வமாய் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் போது தான் அவர்களுக்கு இரட்சிப்பு கிடைக்கும். பாவமன்னிப்பு கிடைக்கும். இதைப்பற்றி சொல்ல வேண்டும்.

அது மாத்திரம் அல்ல பரிசுத்தவான்களுக்கு , இப்படி இரட்சிக்கப்பட்டு கடவுளுக்கு பிரியமாய் வாழுகின்ற தேவமனிதர்களுக்கு, ஒரு சுதந்திரம் இருக்கிறது. அந்த சுதந்திரத்தை அவர்கள் காண வேண்டும் . இப்போது இவர்கள் இருளுக்குள் இருக்கிறார்கள். சாத்தானுடைய அந்தகாரத்திற்குள் கட்டப்பட்டவர்களாகஇருக்கிறார்கள் . தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாமல் இருக்கிறார்கள்.

தேவனை சார்ந்து இருப்பதால் என்ன பயன் என்பதை அறியாமல் இருக்க காரணம் அவர்கள் கண்கள் திறக்கவில்லை. அவர்களின் கண்கள் திறக்கப்படவேண்டும் ஆகவே உன்னை அவர்களுடைய கண்களை

திறக்கும்படியாக அனுப்புகிறேன் என்று இறைவன் இயேசு சொன்னார். அல்லேலூயா...தேவனுக்கு மகிமை உண்டாவதாக .

கண் தெரியாதவனுக்கு வெளிச்சம் என்றும் தெரியாது இருள் என்றும் தெரியாது, எல்லாம் ஒன்றுபோல தான் இருக்கும் .ஆம், எல்லாம் ஒன்று போல இருக்கும். ஒரு வித்தியாசம் தெரியாது. அப்படித் தான் இன்றைக்கு ஆண்டவராகிய தேவனை ஆராதிக்கிற மக்கள் கூட , கொடிய பாவத்தை செய்து கொண்டு அந்தகார இருளுக்குள்ளே அடைக்கப்பட்டு தாங்கள் என்ன செய்கிறோம், இதன் முடிவு என்ன? ஆண்டவரை ஆராதிக்கிறதினால், கிடைக்கிற பலன் என்ன? என்கிறதை அறிந்து கொள்ள முடியாமல் இருக்கிறார்கள்.

எத்தனை பக்தியுள்ளவர்கள் இப்படி இருக்கிறார்கள் பாருங்கள். உங்களுக்கு ஒரு சம்பவத்தை நான் சொல்ல விரும்புகிறேன். ஊழிய காலத்திலே இந்த உபதேசம், இந்த கண்திறக்கப்படும் ஊழியம், இந்த பாவ அறிக்கை , பாவ மன்னிப்பின் உபதேசம் இவைகள் எல்லாம் எந்த முறையிலே ஊழியத்திலே நடைமுறைக்கு வந்தது என்பதை எல்லாம், ஒரே ஒரு சிறிய காரியத்தை சொல்லி விளக்க விரும்புகிறேன்.

எங்களுக்கு வெளிபடுத்தலாகி நாங்கள் ஒரு ஆவிக்குரிய சபையை சந்தித்து கொண்டுவந்தோம். அங்கே ஒரு சாது ஐயா ஒருவர் இருந்தார். அவர்களுக்கு நம்மை மிகவும் பிடித்திருந்தது. நாங்கள் சொல்லும் செய்தி தேவசெய்தியே என அவர் ஏற்றுக்கொள்ளும்படி இருந்தது. அப்போது அவருக்கு உடன் ஊழியராக ஒருவர் இருந்தார். அவர் இந்த பாவ அறிக்கை , இந்த உபதேசம் அவருக்கு விளங்கவில்லை .அதை அவர் ஏற்றுக்கொள்ளவும் இல்லை. அந்த சாது ஐயா அதை ஏற்றுக்கொண்டதை அறிந்து இவர் எரிச்சல்பட்டார். நாங்கள் போனால் எங்களுடன் பேசமாட்டார் , தூர நின்று பார்த்துக்கொண்டு இருப்பார். இப்படியி ருக்கின்ற நாட்களில் , ஒரு நாள் சாது ஐயாவை சந்திக்கிறதற்காக நாங்கள் சபைக்கு சென்றோம். அப்போது அவர் அங்கு இல்லை வெளியே போய் விட்டார். போகும்போது சொல்லிவிட்டு . போயிருக்கிறார் , இப்படி நான் போகும் போது அவர்கள் வந்தார்கள் என்றால்,

கர்த்தருடைய செய்தியை கொண்டு வருவார்கள் , என்ன என்பதை கேட்டு எழுதி வைத்துக்கொள் என்று சொல்லிவிட்டு அவர் போய் விட்டார். அப்போது நாங்கள் அங்கே போனோம். அப்போது சாது ஐயாவுக்கு ஏதாவது செய்தி இருக்கா? ஐயா எழுதி வைக்க சொன்னர்கள் என்று சொன்னார்.

அப்போது அவர்களுக்கு செய்தி இல்லை உங்களுக்கு தான் செய்தி இருக்கிறது என்று சொன்னோம்.அருமையானவர்களே, கண்திறக்கப்பட்டவனுக்குத்தான் ஆடையில் அழுக்கு இருந்தால் தெரியும், மற்றவர்களுக்கு அதை காண்பித்து சொல்லிக்கொடுக்க முடியும் இல்லையா?. ஆகவே, அப்படி இருக்கும் போது உங்களுக்குத்தான் ஒரு செய்தி இருக்கிறது என்று சொன்னோம். என்ன என்று கேட்டார். உங்களிலே கடந்துபோன நாட்களில் உள்ள ஒரு பாவம் உங்களுக்குள் இருக்கின்றது. அந்த பாவத்தினாலே உங்களுக்கு ஆவிக்குரிய அனுபவங்களிலே வளர்ச்சி இல்லாமலும் மேன்மை அடையமுடியாமலும் இருக்கிறது. ஆவிக்குரிய வரங்களை , ஆசீர்வாதங்களை, ஆவியின் வல்லமைகளை பெற வேண்டும் என்று விரும்புகிறீர்கள் ஆனால் ,முடியவில்லை காரணம் குற்ற உணர்வு ,பாவம் இருக்கிறது. அப்போது அவர் உடனே ,அப்போதே நான் இயேசுவிடம் அறிக்கை செய்துவிட்டேன் என்று சொன்னார்.

இயேசு கிறிஸ்துவிடத்திலே அறிக்கை செய்யும் முறை எப்படி.? இயேசு கிறிஸ்து விடம் தான் அறிக்கை செய்ய வேண்டும்? அது எப்படி? என்கிறதைத்தான் நாங்கள் உங்களுக்கு சொல்லுகிறோம். அப்போது அவர் சொன்னார் . நீங்கள் என்னுடைய பாவத்தை சொல்லி தந்து விட்டீர்கள் என்றால். .நான் உடனே இந்த உபதேசத்தை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறேன். எனக்கு வேண்டியது ஆவிக்குரிய ஜீவியம், வளர்ச்சி, மேன்மை. பரிசுத்தவாழ்க்கை தான் வேண்டுமென்று அவர் எங்களிடம் சொன்னார்.

அப்படியே அவரை காட்டுக்கு அழைத்து கொண்டு போனோம். அங்கே அவருக்காக ஜெபம்பண்ணினோம். பர்டிகுலராக அவர் செய்த பாவத்தை கர்த்தர் எங்களுக்கு சொன்னார். அதை சொன்னோம்.அப்படியே அவர் சரண்டர் ஆனார். ஆச்சரியப்பட்டார். இது எனக்கே மறந்து போன ஒரு

காரியம் . ஆனால் இது ஒரு பெரிய பாவம். இந்த பாவத்தினால் எனக்கு ஆவிக்குரிய ஜீவியம் நஷ்டப்படுகிறது என்பதை நான் அறிய முடியவில்லை. ஆனால் , அறிய விரும்பினேன் ,சொல்லித்தர ஆள் இல்லை என்று சொன்னார்.

கண்திறக்கப்பட்டவன் தான் சொல்லிக்கொடுக்க முடியும். இப்படி எத்தனையோ பேரை விடுதலையாக்கி இருக்கிறோம் . அருமையான தேவனுடைய பிள்ளைகளே , அவர் பாவ அறிக்கை செய்தார், செய்து திருச்சபைக்கு ஒரு உண்மையான உத்தமமான ஊழியக்காரராக மாறி அவர் பணி செய்து, வயதாகி பரலோகத்துக்கு போய் இருக்கிறார். அல்லேலூயா! தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

அவர் பரலோகத்துக்கு போகிற அன்று கூட காலையில் திருச்சபையிலே ஐந்து மணிக்கு ஒரு ஜெபம் உண்டு. அந்த ஜெபத்தையும் பண்ணிவிட்டு படுத்தவர். அப்படியே போய் விட்டார் பரலோகத்திற்கு. தேவனுக்கு மகிமை உண்டாவதாக. கண்திறக்கப்பட வேண்டும் என்று இறைவாக்கு சொல்கிறது.

கண்திறக்கப்பட்டவன் தான் இந்த ஊழியத்தை செய்ய வேண்டும். அவர்களுக்குத்தான் மக்களை இருளை விட்டு சாத்தானுடைய அதிகாரத்தை விட்டு அவர்களை தேவனிடத்திற்கு திருப்பமுடியும். அது மட்டுமல்ல இரட்சிக்கப்பட்டவர்களுக்கு பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு ஒரு பெரிய சுதந்திரம் இருக்கிறது என்கிறதை அவர்கள் கேட்கிறதினால்மட்டும் அல்ல பார்க்கவும் வேண்டும் , பார்க்க வைக்க வேண்டும் என்று இறைவனுடைய வார்த்தை சொல்லுகிறதை நாம் இங்கே, காணுகிறோம்.

தேவனுக்கு மகிமை உண்டாவதாக , பார்த்தால் தானே மனிதனுக்கு அது தெரியும். இல்லாவிட்டடால் தெரியாது. அல்லவா? சொல்லுகிறதினால் என்னமோ சொல்லிகிறார்கள் அவர்கள் மதத்தைப் பற்றி ,அவர்கள் சபையை பற்றி அவர்களுடைய கூட்டத்தை பற்றி என்னமோ சொல்கிறார்கள் என்றுதான் எண்ணுவார்கள்.கண் திறக்கப்படும் போது தான் அவர்களுக்கு தேவனுடைய பிள்ளைகளுக்கு என்னென்ன பாதுகாப்பு. என்னென்ன
மேன்மை ,அவர்களுடைய எதிர்காலம் என்ன? .அவர்கள் எங்கே போவார்கள்?

என்றதை பற்றிய அறிவு அப்போது தான் கிடைக்கும் என்று இறை வசனம் சொல்லுகின்றபடியினால் ஆண்டவரை நான் ஸ்தோத்தரிக்கின்றேன்.

பிறவியிலே ஆதாமின் சந்ததிகளாக பிறந்த எல்லாருமே பாவிகள் தான்.ஆதாம் என்று ஆன்மீக குருடராக ஆகிவிட்டாரோ, ஒளியை விட்டு இருளிடத்திற்கு போனாரோ ? அது முதற் கொண்டு பிறக்கிற சந்ததியெல்லாம் ஆன்மீக குருடர்களாக பிறந்திருக்கிறார்கள். ஆனபடியினால் அவர்களுக்கு தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்றால் (யோவான் 9:6-7)வரை உள்ள வசனங்களை நாம் வாசிக்கின்றபோது,

6 இவைகளைச் சொல்லி, அவர் தரையிலே துப்பி, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசி: (யோவான் 9:6)

7 நீ போய், சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பிவந்தான் (யோவான் 9:7).

தேவனுக்கு மகிமை உண்டாவதாக , குருடனாய் போன அவன் இப்போது சீலோவாமின் குளத்திலே கழுவின படியினாலே அவன் பார்வை அடைந்தான் என்று காண்கிறோம். அனுப்பப்பட்டவனிடத்திலே போய் ஆலோசனை கேளு. அனுப்பப்பட்டவனிடம் போய் ஸ்நானம் பெறு. அனுப்பப்பட் டவனிடத்திலே போய் பாவ அறிக்கை செய். விடுதலை உண்டாகும். உன்னுடைய கண் திறக்கும். பக்கத்திலே இருக்கற குளத்திலே கழுவிவிட்டால் என்ன ? தண்ணீர் தானே வேண்டும்.? இல்லை. அனுப்பப்பட்டவனிடம் போக வேண்டும்.

சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தம். ஆகவே அனுப்பப்பட்ட மனிதனிடத்தில் போய் கழுவிக்கொள்ள வேண்டும். நன்றாக கவனியுங்கள் அருமையானவர்களே. இது உங்களுக்கு புதிதாக தெரியலாம். இது ஏதோ கடினமாய் , கஷ்டமாய் தெரியலாம். இப்படி செய்யாத மற்றவர்கள் இல்லையா ? என்று கேட்கலாம்.

அனுப்பப்பட்ட மனிதர்கள் உண்டு. அவர்களிடம் போய் கழுவிக் கொள்ள வேண்டும். ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். தேவனுடைய வார்த்தைகளை கேட்க வேண்டும். அப்படி செய்யும் போது, அவனுடைய மனக் கண்கள், ஆன்மீக கண்கள் திறக்கப்படும் என்று இறைவாக்கு சொல்லுகின்றபடியினாலே ஆண்டவரை நான் ஸ்தோத்தரிக்கின்றேன்.

அல்லேலூயா. தேவனுக்கு மகிமை உண்டாதாக. ஆம், பரிசுத்த பவுலின் ஊழியமும் அது தான்.

அவருடைய கவலை என்ன? இது தான். தேவனுடைய ஜனங்களாகிய சபை மக்களுக்கு ஆன்மீக, கண்கள் திறக்கனும், அவர்கள் தேவனுடைய மகத்துவத்தை காணனும் என்பது தான் அவருடைய ஆசையாக இருந்தது.

ஆகவே அவர் சொல்கிறார் எபேசு சபையை பார்த்து, அதாவது, உங்களுக்கு உங்களுடைய கண்கள் திறக்கப்படும் படியாக தேவனிடத்திலே ஜெபம் பண்ண நாடுகிறேன் என்று. (எபேசியர் 1:19) நாம் வாசிக்கின்ற போது.(வசனம்).

19 தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன் (எபேசியர் 1:19).

கர்த்தருடைய வார்த்தை இப்படி சொல்கிறது.

உங்களுக்கு பிரகாசமான கண்களை, அதாவது உள்ளான பிரகாசமான மன கண்களை கொடுக்கும்படியாக நான் வேண்டிக் கொள்கிறேன். எவ்வளவு தான் பிரசங்கம் பண்ணிலும், எவ்வளவு தான் ஆலோசனை கொடுத்தாலும் உங்களுக்கு அந்த மனக்கண் உள்ளான மனிதனுடைய அந்த கண் திறக்கப்படாத வரைக்கும். போராட்டம், போராட்டம், போராட்டம் தான்.

இயேசுவை ஆராதித்தாலும் போராட்டத்தில் இருந்து விடுதலை இல்லை. பாவத்தில் இருந்து விடுதலை இல்லை.

வெளிப்படையாக செய்யாவிட்டாலும் உள்ளான மனிதன் பாவம் செய்து கொண்டே இருக்கிறான். அநேகருடைய வாழ்க்கையில் துக்கங்கள் ,எவ்வளவு பிரயாசம் பட்டிருந்தாலும் நமக்கு இன்னும், விடுதலை இல்லையே, எதை பார்த்தாலும் தீமையாக இருக்கின்றது. எதை பார்த்தாலும் போராடுகின்றதே என்று கவலைப்படுகிறவர்கள் எத்தனை பேர். அருமையானவர்களே இந்த நாளில் கர்த்தருடைய வார்த்தை என்ன சொல்கிறது.? மனக்கண் திறக்கப்பட வேண்டும். நம்முடைய இந்த மாமிச கண்கள் திறக்கப்பட்டிருக்கலாம், ஆனால் நம்முடைய ஆன்மீக கண்கள் பிரகாசிக்கிறதா?, தேவதரிசனங்களை காணுகிறோமா?. தேவமகத்துவங்கள் வெளிப்படுகிறதா?

இவைகள் நம்முடைய வாழ்க்கையில் வர வேண்டும், கண் திறக்கப்பட்டவர்களுக்கு அது உண்டாகும் என்று இறை வாக்கு சொல்லுகிறதற்காக ஆண்டவரை நான் ஸ்தோத்தரிக்கிறேன்.அல்லேலூயா...

பக்தனாகிய தாவீது ராஜா ஒரு தீர்க்கதரிசி அவருடைய கையில் இருக்கிற வேதத்தை திறக்கும் போதெல்லாம் ,ஆண்டவரே! உம்முடைய வேதத்தின் மகத்துவத்தை பார்க்கும்படி என் கண்களை திறந்தருளும் என்று ஜெபித்தார், எந்த கண் அது?. அவர் நல்ல பார்வை உடையவராகத்தானே இருந்தார்?

அந்த மாமிச கண்ணினால் வேதத்தின் மகத்துவங்களை அறிய முடியாது. அந்த கண்களால் வேதத்தில் இருக்கிற ரகசியங்களை காண முடியாது. அந்த உள்ளான மனிதனில் இருக

அந்த கண்களால் வேதத்தில் இருக்கிற ரகசியங்களை காண முடியாது. அந்த உள்ளான மனிதனில் இருக்கிற கண்ணானது பிரகாசிக்குமானால் அது பிரகாசமுடையதாக இருக்குமானல், வேதத்தில் இருக்கிற வார்த்தையின் அர்த்தங்கள், உள்ளபடியே அது தமக்கு தென்படும். நம்முடைய கண்ணுக்கு, அது தெரியும். ஆனபடியினால், இந்த நாளிலும் இந்த வார்த்தையை கேட்கிற அருமையானவர்களே. கண் திறக்கப்பட வேண்டும். கண்திறக்கப்படும் ஊழியம்

வேண்டும் என்று இறைவன் விரும்புகின்ற படியினால் ஆண்டவரை நான் ஸ்தோத்தரிக்கிறேன்.

தேவனை நம்புகிறதினால், தேவனை ஆராதிக்கிறதினால், பிரமாணங்களை கைக்கொள்ளுகிறதினால் உண்டாகும் பாதுகாப்பு எவ்வளவு பெரியது, என்பதை தேவ பிள்ளைகள் சரியாக அறிந்து கொள்ளமுடியும்.

எலிசா பெரிய தேவனுடைய மனிதன். தேவனுடைய மனிதன் அவன், குகைக்குள் இருந்து கொண்டே அடுத்த நாட்டிலே என்ன நடக்கிறது என்று பார்க்கக்கூடிய பார்வையை பெற்றவன், அப்படி இருக்கும் போது, சீரியா தேசத்து ராஜா அவன் தன்னுடைய பள்ளி அறையிலே சிந்திக்கிற காரியங்கள் எல்லாம் வெளியே போகிறது என்ற அவனுக்கு அச்சம் ஏற்பட்டது. இஸ்ரவேல் தேசத்தை கைப்பற்றவும் பிடிக்கவும், இவன் இன்ன இடத்தில் பாளையம் இறங்க வேண்டும் என்று தன் சகாக்களுடன் பேசுகிற காரியம் இங்கே இஸ்ரவேல் தேசத்தில் இருக்கின்ற ராஜாவுக்கு வந்துவிடுகின்றது.

ஆகவே சீரியா ராஜா சொல்லுகின்றான். நமக்குள்ளே ஒரு ஒற்றன் ஒருவன் இருக்கிறான். இங்கே நாம் பேசுகிற காரியத்தை அங்கே அவன் அறிவிக்கிறான். அவன் யார் என்று கோபதாபமாய் சீரியா ராஜா கேட்கிறான். அவர்களில் ஒருவன் எழும்பி சொன்னான், இல்லை ராஜாவே அந்த தேசத்திலே கண் திறக்கப்பட்ட தேவ மனிதன் ஒருவன் இருக்கிறான்.அவன் எங்கே எந்த கடைகோடியிலே எந்த மூலையில் என்ன நடக்கின்றதோ , அந்த கண்களினாலே அதை பார்ப்பான், அவைகளை பார்த்து, ராஜாவுக்கு அறிவித்துக் கொண்டு இருக்கிறான் என்று அவன் சொன்னான்.

உடனே சீரியா ராஜா,படைகளை உடனே ஆயத்தப்படுத்து. அவன் எங்கே இருக்கிறான்? . என்று கேட்க , அவன் ஒரு மலையில் இருக்கிறான் என்று சொல்ல, மலையை சுற்றி பாளையம் இறங்கி அவனை பிடித்துக் கொண்டு வாருங்கள் என்று சேனைகளை அனுப்பினான். அப்படியே சேனைகள் வந்து மலையை சுற்றி பாளையம் இறங்கி இருக்கிறது.

காலையிலே தீர்க்கதரிசி எலிசாவின் வேலைக்காரன் கேயாசி வேலைக்காக வெளியே செல்லும்போது இந்த பெரிய பாளையத்தை பார்த்து என்னவென்று விசாரித்து கேட்டான். எலிசாவை பிடித்துக்கொண்டு போவதற்காக, இந்த படைகளில் எல்லாம் வந்திருக்கிறது என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டபோது பயந்து அலறினான். நம்மை பிடித்துக் கொண்டு போகும்படியாக வந்திருக்கின்றதே இவ்வளவு பெரிய படைகள்?, இப்போது நாம் என்ன செய்வோம். என்று கலங்கினான். எலிசா பார்த்துக்கொண்டே இருந்திருப்பார். அவருக்கு தெரியும் அல்லவா?

அவருக்கு இருக்கும் பாதுகாப்பு எவ்வளவு பெரியது என்பதை இவன் பார்க்கவில்லை. பெரிய வரம்பெற்ற மனிதனின் கைக்குள் இருந்தாலும் அவனுடைய கண் திறக்கப்படவில்லை. அவனுடைய கண் திறக்கப்படாதவரைக்கும். தனக்கு தேவன் வைத்திருக்கிற தன்னுடன் இருக்கிற தேவன் மனிதனுக்கு வைத்திருக்கிற பாதுகாப்பு எவ்வளவு பெரியது என்று.

என்னவெல்லாமோ அப்படி இப்படியென்று எண்ணி அவன் பயப்படுகிறான்.அவனுக்கு கண் திறக்கப்பட்டிருந்ததென்றால் பயந்திருக்கமாட்டான், கண் திறக்கப்பட்டவன், கவலை படமாட்டான். ஏனெனில் அவன் கண்ணுக்கு எவ்வளவு பெரிய பாதுகாப்பை தம்முடைய பிள்ளைகளுக்கு வைத்ததிருக்கிறார். இரட்சிப்பை சுதந்தரிக்கிறவர்கள் நிமித்தம் பணிவிடை செய்யக்கூடிய ஆவிகள் பரலோகத்தில் இருக்கிறார்கள் என்பதை அவனால் அறிய முடியும்.

யார், யார் தேவனுடைய திருப்பணியை செய்கிறார்கள் ,இரட்சிப்பை சுதந்தந்தரிக்கின்றார்களோ, இரட்சிப்பை சுதந்தரிக்க கூடிய வார்த்தைகளை சொல்லுகிறார்களோ அவர்களுக்கு பணிவிடை செய்யும்படியாக ஆண்டவர். தூத கணங்களை வைத்திருக்கின்றார். பரலோகத்திலே இந்த உலகத்திலே இருக்கிற மனித எண்ணிக்கையை விட பரலோகத்து தூதர்கள் எண்ணிக்கை அதிகம் என்று சொல்லப்படுகிறது. அதற்காக ஆண்டவருக்கு நன்றி சொல்லுகின்றேன்.ஆமென். அல்லேலூயா.

ஆண்டவர் தன் பக்தர்களுக்கு அவ்வளவு பெரிய பாதுகாப்பு வைத்திருக்கின்றார். இந்த சத்தத்தை கேட்கிற அருமையானவர்களே நீங்கள் பயப்படுகின்றீர்களா? கலங்குகிறீர்களா? ஆண்டவராகிய தேவன், தூதகணங்களை வைத்திருக்கிறார். இப்போது வசனங்களை நாம் வாசிக்க கேட்போம் (2 இராஜாக்கள் 6:16-17).

16 அதற்கு அவன்: பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான் (2 இராஜாக்கள் 6:16).

17 அப்பொழுது எலிசா விண்ணப்பம் பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான்; உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ, எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான் (2 இராஜாக்கள் 6:17).

அது அவனுக்கு வேடிக்கையாக இருந்திருக்கும். இங்கே ஒன்றும் இல்லையே என்று. உண்மையில் அவனுக்கு ஆன்மீகக் கண் திறக்கவில்லை, கண் தெரியாது. அவன் பாவக் கண்ணுடன் இருக்கிறான். இப்படி இல்லாததை சொல்கிறாரே என்று எண்ணி இருக்கலாம்.

தேவனுக்கு மகிமை உண்டாதாக.

அங்கே வந்திருக்கிறது எல்லாம் மாமிச வீரர்களும், மாமிச பெலமுள்ள குதிரைகளும், வந்து மலையை சுற்றிலும் இருக்கிறது. ஆனால் தேவனுடைய மனிதனுக்கு வைத்திருக்கிற பாதுகாப்பு என்ன ? அது அக்கினி இரதமும். அக்கினி குதிரைகளும். அந்த அக்கினி ரதந்தானே எலியாவை மேலே எடுத்துக் கொண்டு போனது. அதே அக்கினி இரதம் எலிசாவுக்கும் பாதுகாப்பாக நிற்கிறது என்று நாம் காணுகிறோம். அப்படியென்றால் தேவன் தம்முடைய பரிசுத்தவான்களை காக்க, பரிசுத்தவான்களை இடம் விட்டு இடம் கொண்டு போக, ஆண்டவராகிய தேவன், அக்கினி ரதங்களை குதிரைகளை வைத்திருக்கிறார். ஆனபடியால்,இவைகள் யாருக்குதெரியும்?, கண்திறக்கப் பட்டவனுக்கு.அல்லேலூயா.

இவனால் அதை விசுவாசிக்க முடியவில்லை. அப்போது எலிசா ஆண்டவரே நீர் எனக்கு வைத்திருக்கின்ற பாதுகாப்பை காணும்படியாக இவன் கண்ணைத் திறந்துவிடும் என்று ஜெபம் பண்ணும்போது கர்த்தர் வேலைகாரன் கேயாசியின் கண்களை திறந்தார். சத்தத்தை கேட்கின்ற அருமையானவர்களே உங்கள் கண்களை ஆண்டவர் திறப்பார்.

உங்களுக்கு கண்கள் திறக்கப்படுவதற்கு கண்திறக்கப்பட்டவன் ஒருவன் விண்ணப்பம் செய்ய வேண்டும். அந்த கண்திறக்கப்பட்டவன் விண்ணப்பம் பண்ணும் போது, அந்த விண்ணப்பம் கேட்கப்படும். குருடருக்குக் குருடர் வழிகாட்டினால் இருவரும் குழியில் விழுவார்களே என்று வேதம் சொல்கிறது. அல்லவா? அப்படிப்பட்ட ஊழியம் இது அல்ல.

இது கண்னை திறக்கின்ற ஊழியம் என்று இறைவசனம் கூறுகிறது. ஆகவே கண் திறக்கப்பட்டவன் தான் பிறருடைய கண்ணையும், திறக்கமுடியும் என்று இறை வாக்கு சொல்கிறது. அருமையான தேவனுடைய பிள்ளைகளே, அதை தான் ஆண்டவராகிய தேவனுடைய வார்த்தை வசனம் (உபாகமம் 29: 4) நாம் வாசிக்கும்போது இஸ்ரவேல் ஜனங்கள் அடிக்கடி, பின் மாறினார்களே காரணம் என்ன?

அவ்வளவோ அற்புதங்கள். எகிப்தில் இருக்கும் போதும் அற்புதங்கள், எகிப்தை விட்டு வெளியே வரும் போதும் வழியிலும் பல விதமாக அற்புதங்கள். தங்கள் வாழ்க்கையில் சில கஷ்டங்கள் வந்தவுடன் மோஸேக்கு விரோதமாக முறுமுறுக்கவும் எதிர்க்கவும், அவர்கள் பழையபடி பழைய வாழ்க்கைக்கு பழைய எகிப்திற்கு திரும்புவதற்கு முற்பட்டார்கள் என்று நாம் காணுகிறோம். காரணம் என்ன என்று (உபாகமம் 29:4) வாசிக்கிறோம்.

3 கர்த்தர் செய்த பெரிய சோதனைகளையும், பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் கண்ணாரக் கண்டீர்களே (உபாகமம் 29:3).

4 ஆகிலும் கர்த்தர் உங்களுக்கு உணரத்தக்க இருதயத்தையும், காணத்தக்க கண்களையும், கேட்கத்தக்க காதுகளையும் இந்நாள்வரைக்கும் கொடுக்கவில்லை (உபாகமம் 29:4).

கவனியுங்கள் தேவன் அந்த கண்களை தரவில்லை. நீங்கள் பார்த்தீர்கள் ,அந்த பாவக் கண்ணால் பார்த்தீர்கள். அற்புதத்தை பார்த்தவுடன் குதித்து துள்ளி, சாடி பதறினீர்கள், சந்தோஷப்பட்டீர்கள், அப்புறம் மறந்திடுகிறீர்கள்.ஏன்?. உங்களுக்கு உள்ளான பார்வை இல்லை.

உள்ளான பார்வை உள்ளவர்கள் தான் ஆண்டவர் இவ்வளவு மகத்துவம் செய்கிற தேவன் நம்மோடு இன்று எவ்வளவு பெரிய காரியங்களை செய்திருக்கிறார் என்று அவர்கள் சந்தோஷப்பட முடியும் என்று இறைவாக்கு சொல்கிறது.

மோஸே கண்திறக்கப்பட்டவன் தான். மோஸே சொன்னபடியே அவர் இனிவரும் பலன் மேல் நோக்கமாய் இருந்து எகிப்தின் பொக்கிஷங்களை அந்த அநித்தியமான சந்தோஷத்தை, அரண்மனையில் இருக்கின்ற அந்த சந்தோஷத்தை விட தேவனுடைய பிள்ளைகள் இங்கே கிறிஸ்துவுக்காக பாடுபடுகிறார்கள் அல்லவா? கிறிஸ்துவுடனே இரத்தத்தினால் மீட்கப்பட்டு இருக்கிறார்கள் அல்லவா? அதனால் அவர்களுக்கு ஏற்படுகிற துன்பங்கள் எத்தனை? அதோடு சேர்த்து நானும் ,கிறிஸ்தவ பிள்ளைகளோடு துன்பத்தை அனுபவிப்பதைத்தெரிந்து கொள்வேன் என்று மோஸே சொல்லுகிறார்.

அருமையாக கர்த்தருடைய பிள்ளைகளே. இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினால் பாவ மன்னிப்பும். பரிசுத்தவான்களுக்கு வைக்கப்பட்டிருக்கிற சுதந்திரமும் பெரியதாக இருக்கிறபடியினால் அவற்றை பெற்றுக்கொள்வீர்களாக. கர்த்தர் நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

ஜெபம்

கர்த்தாவே நீர் சொன்ன வார்த்தைகளை சுருக்கமாய் மக்களுக்கு அறிவிக்க கிருபை செய்தீர் ஆண்டவரே . ஆதி மனிதன் எவ்வண்ணம் எந்தளவு தேவனோடு உறவாடி களிகூர்ந்து மகிழ்ந்தானோ. அந்த அனுபவத்தை மனிதன் மீண்டும் பெற்றுக்கொள்ளும்படியாக இறைவன் உதவி செய்ய வேண்டும் என்று கெஞ்சுகிறோம். உமது பாதத்தில் தருகிறோம். ஆசீர்வதியும், சத்தத்தை கேட்ட மக்களின் வாழ்க்கையில் இருக்கிற இடுக்கண்கள் , நெருக்கடிகள், பாடுகளை மாற்றி, தேவ சமாதானத்தை கட்டளையிட வேண்டும் என்று கெஞ்சுகிறோம். கர்த்தா வே நீர் நல்லவர், நீர் மனிதனுக்கு நன்மை செய்யவே பூமியில் சுற்றித்திரிந்தீர். இன்றும் அதை செய்கிறீர். இந்த சத்தத்தை கேட்கிற மக்களுக்கு நன்மை உண்டாகட்டும். இயேசுவின் மூலம் ஜெபிக்கிறோம் பிதாவே ஆமென். ஆமென். ஆமென்.

****